உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1481

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**19.10.2023,** வியாழக்கிழமை

1. ஞானவேலி கொண்ட அரங்கனே
ஞானிகள் பலம்கொண்ட தேசிகனே
தானதர்மத்தின் மகா சக்தியே
தர்மனே தயாபரனே அரங்கனே உந்தனுக்கு

2. உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 02ம், 19.10.2023, வியாழக்கிழமை)
வகைபட அரங்கன் நீ
வையகத்தை காக்கும் மகாதவசி

3. பெருமைகொண்டு உன்தர்மத்தை உலகோர்
பின்பற்றி வந்தால் போதும் இந்த பேருலகில் யாவர்க்கும்
கர்மவினை அகன்றோடி தர்மபலம்கூடி இனிதே
தரணியில் அவர்களெல்லாம் தவராஜன் உன்வழி ஞானிகளாவரப்பா

4. அப்பனே அகிலத்தை மாற்றும் மகாயோகி நீ
அறம் வளர்த்து உலகோரை மீட்கும் மாதவசி நீ
வரம்தந்து உன்னுள் ஆறுமுகன்யான் இருக்க
வணங்கி உன்வழி மக்கள் தொடர்ந்து வந்தால்போதும் இந்த வையகத்தில் மாற்றம் நிகழக்கூடும்

5. கூடவே அரங்கனாய் ஆறுமுகன்யான்
குவலயத்தில் அற்புதத்தை நடத்திவர
பெருமைபட உலகோர் உன்சன்மார்க்கத்தை ஏற்று
பெருந்தர்மத்தை தொடர்புகூட்டி உலகோர்

6. தர்மத்தில் பங்களிப்பு செய்தால் போதும்
அவர்களெல்லாம் ஞானிகளாக அகிலத்தில் மாற்றங்கண்டு
அரங்கன்நீ செய்கின்ற உலகமாற்றத்தில்
அனைவரும் இடம்பெற்று சிறப்பரப்பா

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—